සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය
எனதுஇல DSD/HO/05/MF/01/சுற்றுநிருபம் | ඔබේ අංකය
உமது இல .............................................. | දිනය
திகதி 2019.04.22
Date

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் - 2019/06**

அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் /
வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்களுக்கும்.

## சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் தரப்படுத்துவதற்குமான வேலைத்திட்டம் - 2018

**01. அறிமுகம்** -

2016.12.31 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2016/12 இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கம் மற்றும் குறிக்கோள்களை முன் நிறுத்தி இதற்கு முன்னர் 2016 , 2017 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை மதிப்பீடு செய்தல் மற்றும் தரப்படுத்தல் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பல நோக்கங்கள் வெற்றிகரமான முறையில் அடையப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சமுர்த்தி வங்கி வலையமைப்பின் கடந்த கால நிதி நிலைமைகளை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக இன்நிலைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பணிக்குழுவின் ஆர்வம், சமுர்த்தி வங்கிகளின் வாடிக்கையாளர் சேவை (Customer Care), அழகிய வங்கிச் சுற்றாடல், உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் (5S) பாவிக்கப்படுகின்றமை போன்றன முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது உயர்வான நிலையில் செயற்படுத்தப்பட்டு வருவதாக இதனுடன் தொடர்புபட்ட பல்வேறு தரப்பாளர்களுடனும் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள், கள ஆய்வு போன்றவற்றின் மூலம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதற்கமைய எதிர்காலத்தில் சமுர்த்தி வங்கி வலையமைப்பின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டு 2018ஆம் ஆண்டிற்கும் இவ்வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு அவசியமான நியதிகள் மற்றும் அவை செயற்படுத்தப்படவுள்ள விதம் போன்றவை இதன்மூலம் அறிமுகம் செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட பிரிவினருக்கு இத்தால் தெளிவுபடுத்தப்படுகின்றது.

1.1 **உள்ளடக்கம்** :-

I. **மதிப்பீட்டுக் கால எல்லை** – 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை

II. **வேலைத்திட்டத்தில் இலக்குவைக்கப்படும் வங்கிகளை உள்வாங்குதல் - 2018.01.01 தொடக்கம் 2018.12.31** வரை செயற்பட்ட அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் இதனுள் உள்வாங்கப்படுவதுடன் இதனோடு தொடர்புபட்டுள்ள பல விடயப்பரப்புக்கள் (கீழ்வரும் பந்திகளில் அறிமுகம் செய்யப்படுகிள்றன) மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

III. **உள்வாங்குவதற்கான நிபந்தனைகள்** -
ஒட்டுமொத்த சமுர்த்தி வலையமைப்பிலும் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களை பொருளாதார ரீதியாகவும் மற்றும் உளரீதியாகவும் பலப்படுத்துவதற்கு மேற்கொண்ட பங்களிப்பினை கருத்தில் கொண்டு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் தேசிய மட்ட மதிப்பீடுகளில் கீழ் குறிப்பிடப்படும் நிலமைகளில் உள்ள வங்கிகள் உள்வாங்கப்படமாட்டாது.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 288772 |
| | | Hot Line :0112-889007 | | | |

அ) வங்கியின் அனைத்து கணக்குகளினதும் ஆள்சார் பேரேட்டு பரீட்சைமீதிகள் மற்றும் பொதுப்பேரேட்டுப் பரீட்சைமீதிகள் சமப்படாத நிலமையில் உள்ள வங்கிகள் (எவ்வாறாயினும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களினாலேயே பரீட்சைமீதிகள் சமப்படவில்லை என மாவட்ட கணக்காய்வு அலகினால் உறுதிப்படுத்தப்படும் வங்கிகள் மதிப்பீட்டுச் செயற்பாட்டுக்கு உள்வாங்கப்படும்)

ஆ) 2018 ஆம் ஆண்டில் நட்டமடைந்த வங்கிகள்

**1.2 செயற்படுத்துகின்ற முறைமை:-**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகின்ற நியதிகளுக்கமைய ஒவ்வொரு விடயத்திற்கும் வங்கிகள் பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளை அடிப்படையாக வைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மதிப்பீடு செய்தல் மற்றும் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

**2. நியதிகளின் அறிமுகம் :-**

2018 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மதிப்பீடு செய்தலுக்கும் தரப்படுத்தலுக்குமான நியதிகளானது இதற்கு முன்னர் 2016.12.31 ஆம் திகதியில் வெளியிடப்பட்டுள்ள 2016/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.0 பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த நியதிகளில் திருத்தங்களை செய்வதறகென தாபிக்கப்பட்ட குழுவின் கலந்துரையாடலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வங்கி முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் இம் முறை இவ் வேலைத்திட்டத்திற்கான நியதிகளாக முன்வைக்கப்படுகின்றன. இதற்கமைய வங்கிகளின் நோக்கத்தின் அடைவுகளை அளவிடக்கூடிய விதத்திலான நியதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**2.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் தரப்படுத்தலுக்கான நியதிகள்**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை தரப்படுத்துவதற்கான நியதிகளானவை கடந்த ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட நியதிகளுடன் ஒப்பிடும் போது பாரியளவான மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அதில் செய்யப்பட்டுள்ள சிறு சிறு மாற்றங்களுடனான நியதிகள் அடங்கலான ஒட்டுமொத்த மதிப்பீட்டு முறைமையும் இத்தால் முன்வைக்கப்படுகின்றது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை தரப்படுத்தும் நடைமுறையில் 05 விடயங்களின் கீழ் வங்கிச் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளது. அதன் பிரகாரம் **ஒரு வங்கி பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகளின் அளவு 500 ஆகும்** . கீழ்வரும் விடயப்பரப்புகளின் முக்கியத்துவத்திற்கு அமைய அவற்றிற்கு வழங்கப்படவுள்ள புள்ளிகளின் அளவு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விடயத்திற்கும் வழங்கப்படவுள்ள புள்ளிகளின் அளவு கீழ்வருமாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| **1.** | வைப்புகள் | - | 125 புள்ளிகள் |
| **2.** | கடன்கள் | - | 135 புள்ளிகள் |
| **3.** | இடர் முகாமைத்துவம் | - | 125 புள்ளிகள் |
| **4.** | இலாபத் தன்மை | - | 80 புள்ளிகள் |
| **5.** | வங்கியின் சுற்றாடல் | - | 35 புள்ளிகள் |
| | **மொத்தம்** | - | **500 புள்ளிகள்** |

**2.1.1 வைப்புகள்– மொத்த புள்ளிகள் - 125**

| | | |
|---|---|---|
| **I.** | நீண்டகால வைப்புகள் (சிறுவர், சிசுரக்க) | - 20 புள்ளிகள் |
| **II.** | சாதாரண வைப்புகள் (அங்கத்தவர் அல்லாதோர், திரியமாதா) | -32 புள்ளிகள் |
| **III.** | உயிரோட்டமுள்ள வைப்புகள் (குழுவைப்பு) | - 30 புள்ளிகள் |
| **IV.** | பங்கு மூலதனம் | - 35 புள்ளிகள் |
| **V.** | அங்கத்தவர் வைப்பு | - 08 புள்ளிகள் |

**2.1.2 கடன்கள் - மொத்த புள்ளிகள் - 135**

| | | |
|---|---|---|
| **I.** | வெளியில் உள்ள அறவிட வேண்டிய கடன் தொகை | - 60 புள்ளிகள் |
| **II.** | கடன் தொகையின் அதிகரிப்பு | - 50 புள்ளிகள் |
| **III.** | கடன்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு | - 10 புள்ளிகள் |
| **IV.** | கடனாளிகளின் வீதம் | - 15 புள்ளிகள் |

**2.1.3 இடர் முகாமைத்துவம் – மொத்த புள்ளிகள் - 125**

**I. கடன் இடர்களை முகாமை செய்தல் - 45 புள்ளிகள்**

| | |
|---|---|
| • காலங்கடந்த கடன் வீதம் | - 15புள்ளிகள் |
| • அறவிடமுடியா கடன் வீதம் | - 15 புள்ளிகள் |
| • தொடர்புபட்ட குழுவினருக்கு கடன் வழங்கல் | - (-) புள்ளிகள் |
| • அறவிடமுடியா கடன் ஒதுக்கம் செய்யப்படாமை | - (-) புள்ளிகள் |
| • அறவிடமுடியா கடன் மீள் அறவீடு | - 15 புள்ளிகள் |

**II. திரவத்தன்மை இடர்களை முகாமை செய்தல் - 15 புள்ளிகள்**

| | |
|---|---|
| • திரவத்தன்மை வீதம் | - 5 புள்ளிகள் |
| • வைப்புகளுக்கான கடன் வீதம் | - 10 புள்ளிகள் |

**III செயற்பாட்டு இடர்களை முகாமை செய்தல் - 65 புள்ளிகள்**

| | |
|---|---|
| • வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் | - 25 புள்ளிகள் |
| • கோவை நடைமுறைகள் | - 25 புள்ளிகள் |
| • தகவல்களை முகாமைத்துவம் | - 15 புள்ளிகள் |

**2.1.4 இலாபத்தன்மை – மொத்த புள்ளிகள் - 80**

| | | |
|---|---|---|
| I. | காலத்தினுள் உழைத்த இலாபம் | - 35 புள்ளிகள் |
| II. | வருமானத்தினுள் கடன் வட்டி வருமானம் | - 20 புள்ளிகள் |
| III. | சொத்துக்களுக்கான இலாப உழைப்பு வீதம் (AROA) | - 10 புள்ளிகள் |
| IV. | பங்கொன்றின் இலாப உழைப்பு வீதம் | - 05 புள்ளிகள் |
| V. | வங்கியின் நிதி ஸ்தீரத்தன்மை (தேறியநிதிச் சொத்து / வெளியார் சொத்து) | - 05 புள்ளிகள் |
| VI. | மொத்த வருமானத்தில் பணிக்குழுச்செலவு வீதம் | - 05 புள்ளிகள் |

**2.1.5 வங்கிச் சுற்றாடல் - மொத்தப்புள்ளிகள் – 35**

| | |
|---|---|
| • சுற்றுநிருப ஆலோசணைகளுக்கு அமைவாக தயாரிக்கபட்ட பெயர்ப்பலகை காட்சிப்படுத்தல் | - 05 புள்ளிகள் |
| • சுற்றுநிருப ஆலோசணைப்படி கட்டிடத்துக்கு வர்ணம் பூசுதல் | 05புள்ளிகள் |
| • வங்கிக்கட்டிட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் (மதில்/ வேலி, பூரண பாதுகாப்பு கொண்ட கட்டிடமாக இருத்தல்) | -05புள்ளிகள் |

- சுத்தமானதும், கவர்ச்சியானதுமான தோட்ட அமைப்பு - 05புள்ளிகள்
- வாடிக்கையாளர்கள் மற்றும் சமுதாயமட்ட தலைவர்களை அன்புடன் வரவேற்பதற்கான நடைமுறைகள் ( இருக்கை வசதிகள் , குடிநீர் ,மலசலகூடம் தினசரிப்பத்திரிகை ,தொலைக்காட்சி ) (ஒரு விடயத்துக்கு 2.5 புள்ளிகள் வீதம்) - 10 புள்ளிகள்
- சுற்றுநிருபத்திற்கமைய தேவையற்றவைகளை அழிக்காது வைத்திருத்தல்- - (- 01 புள்ளி)
- அடிப்படை தகவல்களை காட்சிப்படுத்தல-

( வாடிக்கையாளர்கள் தெரிந்திருக்க/ வேண்டிய அடிப்படை தகவல்களை
காட்சிப்படுத்தல் - வைப்புக்களின் வகைகள் / கடன்களின் வகைகள்,
வட்டி வீதங்கள் , கடன் எல்லைகள் /பிரதான காரியாலயத்தின்
தொலைபேசி இலக்கங்கள்)
ஒவ்வொரு விடயத்திற்கும் **01புள்ளி வீதம் கூடியது - 05 புள்ளிகள்**

## 03. வைப்புகளுக்கு :– மொத்த புள்ளிகள் - 125

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் தற்போது செயற்பாட்டில் உள்ள கட்டாய சேமிப்பு தவிர ஏனைய சுயாதீனமான அனைத்து வைப்புக்களும் இதன் போது கவனத்தில் கொள்ளப்படும். இங்கு **செயற்படாத கணக்குகளின் எண்ணிக்கை** கணிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இருப்பினும் இவற்றின் **வைப்புத்தொகை** மொத்த வைப்புக் கணிப்பீட்டின் போது கருத்தில்கொள்ளப்படும். மேலும் இவ் ஆண்டின் வைப்புத்தொகை அதிகரிப்பினை கணிப்பிடும் போது வைப்புத்தொகை அதிகரிப்பு வீதம் என்பதற்கு பதிலாக வங்கியின் அதிகாரப்பிரதேசத்தினுள் காணப்படும் கிராமசேவகர் பிரிவு எண்ணிக்கையின் வேறுபாடுகளை கவனத்தில் கொண்டு வருடத்தினுள் சேமிக்கப்பட்ட மொத்த சேமிப்புத்தொகையினை கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையால் பிரித்து ( சராசரி அதிகரிப்புத்தொகை) அதற்கமைவாக புள்ளிகள் வழங்கப்படவுள்ளது. நிதியத்தினை திரட்டும் போது ஒவ்வொரு வைப்பு வகையினதும் மொத்த வைப்புத்தொகைக்கு வழங்கிய பங்களிப்பினை கருத்தில் கொண்டு அதன் பெறுமதிக்கு ஏற்றவிதத்தில் புள்ளிகளின் அளவு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 3.1 நீண்டகால வைப்பு ( சிறுவர் , சிசுரக்க ) – 20 புள்ளிகள்

### 3.1.1 மொத்த சேமிப்புத் தொகை – 10 புள்ளிகள்

மொத்தமாக சேகரித்துள்ள நீண்டகால வைப்புத்தொகை 01 மில்லியன் ரூபா அல்லது அதனை விட குறைவு 01 புள்ளியும், அதைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 01 மில்லியன் ரூபாக்கும் 01 புள்ளி வீதம் **கூடியது 10 புள்ளிகள்**

$$\frac{\text{மொத்த நீண்ட கால வைப்புத்தொகை}}{\text{01 மில்லியன் ரூபா}}$$

இதுவரை சேமித்துள்ள மொத்த நீண்டகால மொத்த வைப்புத் தொகை ரூபா 10,500,000/= தை விட அதிகம் எனின் **01 வெகுமதிப்புள்ளி (Bonus)** மொத்த புள்ளிகளுடன் சேர்க்கப்படும்.

### 3.1.2 வருடத்தினுள் வைப்புத் தொகையின் சராசரி அதிகரிப்பு - 05புள்ளிகள்

வருடத்தினுள் வைப்புத்தொகையின் சராசரி அதிகரிப்பு = வருடத்தினுள் சேகரித்த நீண்டகால வைப்புத்தொகை / வங்கியின் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை

காலத்தினுள் நீண்டகால வைப்புத்தொகையின் சராசரி அதிகரிப்பு ரூபா 100,000/= அல்லது அதனை விட குறைவு எனின் 01 புள்ளியும், அதனை விட அதிகரிக்கும் ஒவ்வொரு ரூபா 100,000/= வுக்கும் 01 புள்ளி வீதம் **கூடியது 05 புள்ளிகள்**

### 3.1.3 வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு - 05புள்ளிகள்

காலத்தினுள் நீண்டகால வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் 3.5% அல்லது அதனைவிட குறைவு எனின் 01 புள்ளியும், அதனை விட அதிகரிக்கும் ஒவ்வொரு 3.5% அதிகரிப்புக்கும் 01 புள்ளிவீதம் **கூடியது 05 புள்ளிகள்**

நீண்டகால வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு = (2018 இல் மொத்த நீண்டகால வைப்பு கணக்குகளின் எண்ணிக்கை –2017 இல் மொத்த நீண்டகால வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை / 2017ல் மொத்த நீண்டகால வைப்பு கணக்குகளின் எண்ணிக்கை

## 3.2 சாதாரணவைப்பு – (அங்கத்தவர் அல்லாதோர், திரியமாதா) – 32 புள்ளிகள்

### 3.2.1 மொத்த சாதாரண வைப்புத்தொகை – 12 புள்ளிகள்

இதுவரை சேகரித்துள்ள சாதாரண வைப்புத்தொகை ரூபா 02 மில்லியன் அல்லது அதனைவிட குறைவு எனின் 01 புள்ளியும், அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 02 மில்லியன் ரூபாவுக்கும் 01 புள்ளிவீதம் **கூடியது 12புள்ளிகள்**

மொத்த சாதாரண வைப்புகளின் தொகை / 02 மில்லியன் (ரூபா)

### 3.2.2 சாதாரண வைப்புத்தொகையின் சராசரி அதிகரிப்பு – 12புள்ளிகள்

காலத்தினுள் சாதாரண வைப்புத் தொகையின் சராசரி அதிகரிப்பு ரூபா 100,000/= அல்லது அதனைவிட குறைவு எனின் 03புள்ளிகளும் , அதனை விட அதிகரிக்கும் ஒவ்வொரு ரூபா 100,000/= வுக்கும் 03புள்ளிகள் வீதம் **கூடியது 12 புள்ளிகள்**

சாதாரண வைப்புத்தொகையின் சராசரி அதிகரிப்பு =வருடத்தினுள் சேகரித்த சாதாரண வைப்புத்தொகை / வங்கியின் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை

**3.2.3 வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு – 08புள்ளிகள்**

காலத்தினுள் வைப்புக்கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் 2.5% அல்லது அதனைவிட குறைவு எனின் 02 புள்ளிகளும், அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 2.5% க்கும் 02 புள்ளிகள் வீதம் **கூடியது 08 புள்ளிகள்**

சாதாரண சேமிப்பு கணக்கின் மொத்த எண்ணிக்கை அதிகரிப்பு = (2018 மொத்த சாதாரண சேமிப்பு கணக்குகளின் எண்ணிக்கை - 2017 சாதாரண சேமிப்பு கணக்குகளின் எண்ணிக்கை) / 2017 இல் மொத்த சாதாரண சேமிப்பு கணக்குகளின் எண்ணிக்கை x 100

**3.3 உயிரோட்டமுள்ள வைப்புக்கள் (குழுவைப்பு) – 30புள்ளிகள்**

**3.3.1 மொத்த குழு வைப்புத்தொகை – 15 புள்ளிகள்**

இதுவரை சேகரித்துள்ள குழுவைப்புத் தொகை ரூபா 02 மில்லியன் அல்லது அதனை விட குறைவு எனின் 01 புள்ளியும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 02 மில்லியன் ரூபாவுக்கும் 01 புள்ளிவீதம் **கூடியது 15 புள்ளிகள்**

மொத்த குழுவைப்புத் தொகை / 2 மில்லியன் ரூபா

**3.3.2 குழுவைப்புத் தொகையின் சராசரி அதிகரிப்பு – 10 புள்ளிகள்**

காலத்தினுள் குழு வைப்புத் தொகையின் சராசரி அதிகரிப்பு ரூபா 100,000/= அல்லது அதனைவிட குறைவு எனின் 2.5 புள்ளிகளும் , அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு ரூபா 100,000/= க்கும் 2.5 புள்ளி வீதம் **கூடியது 10 புள்ளிகள்**

காலத்துக்குள்ளான வைப்புத்தொகையின் சராசரி அதிகரிப்பு = 2018 இல் சேகரிக்கப்பட்ட குழுவைப்புத்தொகையின் அதிகரிப்பு / வங்கியின் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை ×100

**3.3.3 குழுவைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு – 05புள்ளிகள்**

காலத்தினுள் குழுவைப்புக்கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் 2% அல்லது அதனைவிட குறைவு எனின் 2.5 புள்ளிகளும் , அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 2% க்கும் 2.5புள்ளிகள் வீதம் **கூடியது 05 புள்ளிகள்.**

குழுக்கணக்கு எண்ணிக்கை அதிகரிப்பு = (2018 இல் மொத்த குழுக்கணக்குகள் - 2017 இல் மொத்த குழுக்கணக்குகள் ) / 2017 இல் மொத்த வைப்புகளின் எண்ணிக்கை x100

**3.4 பங்கு மூலதனம் - 35 புள்ளிகள்**

**3.4.1 மொத்த பங்கு மூலதனம் - 20 புள்ளிகள்**

இதுவரை சேகரித்துள்ள பங்கு மூலதன நிதி ரூபா 02மில்லியன் அல்லது அதனை விட குறைவு எனின் 02 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 02 மில்லியன் ரூபாவுக்கும் 02 புள்ளிவீதம் **கூடியது 20 புள்ளிகள்.**

மொத்த பங்கு மூலதனம் / 02 மில்லியன் ரூபா

**3.4.2 மொத்த பங்கு மூலதனத்தின் சராசரி அதிகரிப்பு – 10 புள்ளிகள்**

காலத்தினுள் பங்கு மூலதனத்தின் அதிகரிப்பு சராசரியாக ரூபா 100,000/= அல்லது அதனைவிட குறைவு எனின் 2.5 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு ரூபா 100,000/= க்கும் 2.5புள்ளிகள் வீதம் **கூடியது 10 புள்ளிகள்.**

$$\text{பங்கு மூலதனத்தின் சராசரி அதிகரிப்பு} = \frac{\text{2018 ஆம் ஆண்டினுள் சேகரித்த பங்கு வைப்புத்தொகை}}{\text{வங்கியின் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை}}$$

**3.4.3 பங்குக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு – 05 புள்ளிகள்**

காலத்தினுள் குழுவைப்புக்கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் 1% அல்லது அதனைவிட குறைவு எனின் 01 புள்ளியும் , அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 1% க்கும் 1 புள்ளி வீதம் **கூடியது 05 புள்ளிகள்**.

பங்குகணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு =

$$\frac{\text{(2018 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை – 2017 இல் மொத்த பங்குக்கணக்குகள்)}}{\text{2017 இல் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை}}$$

**3.5 அங்கத்தவர் வைப்புக்கள் - 08 புள்ளிகள்**

**3.5.1 மொத்த அங்கத்தவர் வைப்புத்தொகை – 04புள்ளிகள்**

இதுவரை சேகரித்துள்ள அங்கத்தவர் வைப்புத்தொகை ரூபா 06 மில்லியன் அல்லது அதனை விட குறைவு எனின் 01 புள்ளியும் , அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 06 மில்லியன் ரூபாவுக்கும் 01 புள்ளிவீதம் **கூடியது 04 புள்ளிகள்.**

$$\frac{\text{மொத்த அங்கத்தவர் வைப்புத்தொகை}}{\text{06 மில்லியன் ரூபா}}$$

**3.5.2 அங்கத்தவர் வைப்புத் தொகையின் சராசரி அதிகரிப்பு – 02 புள்ளிகள்**

காலத்தினுள் அங்கத்தவர் வைப்புத் தொகையின் அதிகரிப்பு சராசரியாக ரூபா 50,000/= அல்லது அதனைவிட குறைவு எனின் 0.5 புள்ளியும் , அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு ரூபா 50,000/= க்கும் 0.5புள்ளிகள் வீதம் **கூடியது 02 புள்ளிகள்.**

$$\text{அங்கத்தவர் வைப்புத்தொகையின் சராசரி அதிகரிப்பு} = \frac{\text{வருடத்தினுள் சேகரித்த மொத்த அங்கத்தவர் வைப்பு}}{\text{வங்கியின் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை}}$$

**3.5.3 அங்கத்தவர் வைப்புக்கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு -02 புள்ளிகள்**

காலத்தினுள் அங்கத்தவர் வைப்புக்கணக்குகளின் அதிகரிப்பு வீதம் 3.5% அல்லது அதனைவிட குறைவு எனின் 01 புள்ளியும், அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 3.5% க்கும் 01 புள்ளி வீதம் **கூடியது 02 புள்ளிகள்.**

$$\text{கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு} = \frac{\text{2018 மொத்த அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை - 2017இல் மொத்த அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை}}{\text{2017 இல் மொத்த அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை}}$$

**4. கடன் - மொத்த புள்ளிகள் -135**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் பிரதான எதிர்பார்ப்பு குறைந்த வருமானம் பெறும் தொழில் முயற்சியாண்மையுள்ள மக்களுக்கு மூலதன சக்தியை வழங்குவதாகும். கடன்களே வங்கியின் இலாபம் உழைக்கும் ஒரு பிரதான சொத்தாகும். காலம் கடந்த கடன்கள் , அறவிடமுடியாக் கடன்கள் இல்லாத கடன் நடவடிக்கைகளை செயற்படுத்திச் செல்லவேண்டியது வங்கிகளின் பிரதான பொறுப்பாக அமைவதுடன் இவ்விடயங்கள் பின்வரும் அளவீடுகள் மூலம் மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.1 வெளியில் உள்ள கடன்கள் - 60 புள்ளிகள்**

வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடன்தொகை ரூபா 10 மில்லியன் அல்லது அதனைவிட குறைவு எனின் 4.25 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 10 மில்லியன் ரூபாவுக்கும் 4.25 புள்ளிகள் வீதம் **கூடியது 60 புள்ளிகள்**

$$\frac{\text{வெளியில் உள்ள மொத்த கடன்தொகை}}{\text{ரூபா 10 மில்லியன்}}$$

வெளியில் உள்ள கடன்தொகையின் அளவு **145** மில்லியன் ரூபா அல்லது அதனைவிட அதிகம் எனின் 01 வெகுமதிப்புள்ளி (Bonus) உரித்தாகும்

**4.2 கடன் தொகையின் அதிகரிப்பு – 50 புள்ளிகள்**

கடன்தொகையின் (பணத்தின் ) அதிகரிப்பு வீதம் 10% அல்லது அதனைவிட குறைவு எனின் 15 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 10% க்கும் 15 புள்ளிகள் வீதம் **கூடியது 50 புள்ளிகள்.**

$$\text{கடன்தொகையின் அதிகரிப்பு} = \frac{\text{2018 இல் விடுவிக்கப்பட்ட மொத்த கடன்களின் எண்ணிக்கை – 2017 இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை}}{\text{2017 இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை}} \times 100$$

**4.3 கடன் எண்ணிக்கையின் அதிகரிப்பு - 10 புள்ளிகள்**

கடன் எண்ணிக்கையின் அதிகரிப்பு வீதம் 3.5% அல்லது அதனைவிட குறைவு எனின் 2.5 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 3.5% க்கும் 2.5 புள்ளிகள் வீதம் **கூடியது 10 புள்ளிகள்**

$$\text{கடன் எண்ணிக்கைகளின் அதிகரிப்பு} = \frac{\text{( 2018 இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை – 2017இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை )}}{\text{2017 இல் மொத்த கடன்களின் எண்ணிக்கை}} \times 100$$

**4.4 கடனாளிகளின் வீதம் - 15 புள்ளிகள்**

வங்கியின் அதிகாரப் பிரதேசத்தினுள் கடன்பெருக்கத்தின் பரம்பலை கருத்தில் கொள்ளல் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் நோக்கம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அவசியமான மூலதன வசதியினை வழங்குவதனூடாக அவர்களின் வாழ்வாதாரத் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதாகும்.

$$\text{கடனாளிகளின் வீதம்} = \frac{\text{வெளியில் உள்ள கடன்களின் எண்ணிக்கை}}{\text{பங்காளர்களின் எண்ணிக்கை}} \times 100$$

(வெளியில் உள்ள கடன்களின் எண்ணிக்கையினை கணிப்பிடும் போது இடர் நுகர்வு, சுயசக்தி மற்றும் வீட்டுக்கடன்களின் எண்ணிக்கையினை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.)

மேற்படி சூத்திரத்திற்கு அமைய 10% அல்லது அதனைவிட குறைவு எனின் 3 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 10% க்கும் 3 புள்ளிகள் வீதம் **கூடியது 15 புள்ளிகள்**

## 5. இடர் முகாமைத்துவம் - மொத்த புள்ளிகள் - 125

நிதிரீதியான தன்னிறைவுத் தன்மையினை உருவாக்கிக் கொள்வதற்கு வங்கியினுள் ஒவ்வொரு விடயத்துக்குமான இடர்முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகவுள்ளது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியொன்று முகம் கொடுக்கும் பிரதான இடர்கள் 03யும் முகாமை செய்யும் விதம் தொடர்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

1. **கடன் இடர் - 45 புள்ளிகள்**
2. **திரவத்தன்மை இடர் - 15 புள்ளிகள்**
3. **செயற்பாட்டு இடர் - 65 புள்ளிகள்**

### 5.1 கடன் இடர்களை முகாமை செய்தல் - 45 புள்ளிகள்

வங்கியின் பிரதான சொத்தாகவுள்ள கடன்களின் இடர்களை (ஆபத்துக்களை) குறைத்துக் கொள்ளும் விதம் கவனத்தில் கொள்ளல்

#### 5.1.1. காலம் கடந்த கடன் வீதம் :- 15 புள்ளிகள் (09 மாதங்களுக்கு குறைவாக தாமதமாகியது)

வெளியில் உள்ள அறவிடவேண்டிய கடன்களுக்கு காணப்படும் இடர்களை (ஆபத்துக்களை) கருத்திற் கொள்ள வேண்டும். இங்கு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவது இடர்பாடுகள் கொண்ட கடன் தொகுதியின் வீதமாகும். (PAR – Portfolio At Risk) இதனை கணிப்பிடும் பொருட்டு மொத்த அறவிடவேண்டிய கடன் தொகையில் **காலம் கடந்த கடன் தொகையின் மீதி** எவ்வாறு உள்ளது என்பது கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

காலம் கடந்த கடன் வீதம் 0 எனின் - 15புள்ளிகள்

$0 <$ காலம் கடந்த கடன் வீதம் $\leq 1\%$ எனின் - 12 புள்ளிகள்

$1 <$ காலம் கடந்த கடன் வீதம் $\leq 3\%$ எனின் - 10 புள்ளிகள்

$3 <$ காலம் கடந்த கடன் வீதம் $\leq 5\%$ எனின் - 05 புள்ளிகள்

$5 <$ காலம் கடந்த கடன் வீதம $\leq 10\%$ எனின் - 0 புள்ளிகள்

காலம் கடந்த கடன் வீதம் 10% விட அதிகரிப்பின் ஒவ்வொரு 10% க்கும் (-1) புள்ளி வீதம் கூடியது (-5) புள்ளிகள் வழங்கப்படும்.(மறைப்புள்ளி)

காலம் கடந்த கடன் வீதம் = $\dfrac{\text{காலம் கடந்த கடன் தவணைகளுடன் இன்னும் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைகளினதும் கூட்டுத்தொகை}}{\text{மொத்த வெளியில் உள்ள அறவிட வேண்டிய கடன்தொகை}} \times 100$

காலம் கடந்த கடன்கள் காணப்படாத வங்கிகளுக்கு முழுமையான 15 புள்ளிகளும் வழங்கப்படும்.

**5.1.2 அறவிடமுடியாக் கடன் வீதம் - 15புள்ளிகள்**

9 மாதங்களை விட கூடிய தவணைகள் செலுத்தப்படாமல் உள்ள கடன்கள் வெளியில் உள்ள அறவிட வேண்டிய தொகையுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்படும். அறவிடமுடியாக் கடன்கள் அதிகமாக காணப்படும் வங்கிகளில் செலவுகள் அதிகமாக இருப்பதுடன் அது இலாபத்தை குறைத்து வங்கியின் ஸ்திரத்தன்மைக்கும் ஆபத்தை ஏற்படுத்தும்.

**5.1.2 அறவிடமுடியாக் கடன் வீதம் - 15 புள்ளிகள்**

அறவிடமுடியாக் கடன்வீதம் 0 எனின் - 15 புள்ளிகள்

$0 <$ அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq 0.5\%$ எனின் - 12 புள்ளிகள்

$0.5 <$ அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq 1.5\%$ எனின் - 10 புள்ளிகள்

$1.5 <$ அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq 3\%$ எனின் - 05 புள்ளிகள்

$3 <$ அறவிடமுடியாக் கடன்வீதம் $\leq 5\%$ எனின் - 00 புள்ளிகள்

அறவிடமுடியாக் கடன்வீதம் 5% க்கு அதிகம் எனின் ஒவ்வொரு 5% வீதத்துக்கும் (-2) புள்ளி வீதம் கூடியது (- 10) புள்ளி வழங்கப்படும்

$$\text{அறவிட முடியாக் கடன் வீதம்} = \frac{\text{மொத்த அறவிட முடியாக் கடன் தொகை}}{\text{மொத்த வெளியில் உள்ள கடன் தொகை}} \times 100$$

**5.1.3 . அறவிட முடியாக் கடன் மீள் அறவீடு – 15 புள்ளிகள்**

மொத்த அறவிட முடியாக் கடன் தொகையில் இருந்தும் மீள்அறவீடு செய்யப்படும் ஒவ்வொரு 10 % க்கும் 2.5 புள்ளி வீதம் கூடியது 15 புள்ளிகள் வழங்கப்படும்.

$$\frac{\text{வருடத்தினுள் அறவிட்ட மொத்த அறவிட முடியாக் கடன்தொகை}}{\text{(2017.12.31 இல் காணப்பட்ட மொத்த அறவிட முடியாக் கடன் மீதி + 2018இல் ஒதுக்கம் செய்யப்பட்ட அறவிட முடியாக் கடன் தொகை)}} \times 100$$

அறவிட முடியாக் கடன் வீதம் 0 ஆக உள்ள வங்கிகளுக்கு மொத்த 15 புள்ளிகளும் உரித்தாகும்.

**5.1.4 வங்கியுடன் தொடர்புபட்ட குழுவினருக்கு கடன் வழங்குவதை கட்டுப்படுத்தல்**

மதிப்பீட்டுக்கு உட்படும் காலத்தினுள் ஊழியர் மோசடியிலான அறவிட முடியாக் கடன் கணக்கின் மீதி ரூபா 50000/= க்கு (-01) புள்ளி வழங்கப்படும். இம் மீதி அதிகரிக்கும் ஒவ்வொரு 50000/= ரூபாவுக்கும் (-01) புள்ளி வீதம் சேர்க்கப்படும். (எதிர்க்கணியப்புள்ளி)

### 5.1.5 அறவிட முடியாக் கடன்களுக்கான ஒதுக்கம் செய்யாமை.

ஏதாவது ஒரு வங்கியில் சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் 100% அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை எனின் வங்கி பெற்றுக் கொண்ட புள்ளிகளுடன் (-05) புள்ளி சேர்க்கப்படும். (எதிர்க்கணியப்புள்ளி )

## 5.2 திரவத்தன்மை இடர்களை முகாமை செய்தல் ( 15 புள்ளிகள்)

### 5.2.1 திரவத்தன்மை வீதம் - 05 புள்ளி

$1 \leq$ திரவத்தன்மை வீதம் $\leq 10$ எனின் 05 புள்ளிகள் வழங்கப்படும்

$$\text{திரவத்தன்மை வீதம்} = \frac{\text{சேமிப்பு வைப்பு} + \text{கையிருப்பு காசு} + \text{நடைமுறைக் கணக்கு மீதி}}{\text{மொத்த வைப்புகள்}} \times 100$$

சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் இவ் விகிதாசாரம் 10% மாக இருக்க வேண்டியதுடன் இதனை விட அதிகரிக்கின்ற ஒவ்வொரு 1% க்கும் (-1) புள்ளிவீதம் (எதிர்க்கணியப்புள்ளி) சேர்க்கப்படும். விசேடமாக இவ் விடயத்தில் நிதியங்களின் முகாமைத்துவம் தொடர்பிலான இயலுமைகள் கவனத்தில் கொள்ளப்படும். (Fund Management) இவ்வீதம் 1% தைவிட குறைவு எனின் 0 புள்ளிகள்

### 5.2.2 வைப்புகளுக்கான கடன் வீதம் - 10 புள்ளிகள்

$$\text{வைப்புகளுக்கான கடன் வீதம்} = \frac{\text{மொத்த வெளியில் உள்ள கடன் மீதி}}{\text{மொத்த வைப்புக்கள்}} \times 100$$

- **மொத்த வைப்புக்கள்** = கட்டாய சேமிப்பு வைப்பு உட்பட 8 வகையான வைப்புக்களினதும் கூட்டுத்தொகை
- **வெளியில் உள்ள கடன்** = நுகர்வுக்கடன்+ வாழ்வாதார சுழற்சிக்கடன்+ மீள்நிதியீட்டுக்கடன் ஆகிய கடன்களினது மீதி உள்ளடங்காது
- **வைப்புக்களுக்கான கடன் வீதம் - கூடியது 10 புள்ளிகள்**

50% $\leq$ வீதத்துக்கும் $\leq$ 70% க்கும் உட்பட்டது எனின் 05புள்ளிகள்
70% $\leq$ வீதத்துக்கும் $\leq$ 80% க்கும் உட்பட்டது எனின் 08புள்ளிகள்
80% $\leq$ வீதத்துக்கும் $\leq$ 110% க்கும் உட்பட்டது எனின் 10புள்ளிகள்

- அவ்வாறு இல்லை எனின் 0 புள்ளி
- சமுர்த்தி வங்கிகளில் காணப்படும் அதிவிசேட தன்மையினை கருத்தில் கொண்டு இவ்வீதத்தின் அளவு 110 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 5.3 செயற்பாட்டு இடர்களை முகாமை செய்தல் - 65 புள்ளிகள்

வங்கியின் செய்ற்பாட்டு நடைமுறைகளின் இடர்களை முகாமை செய்கின்ற விதம் இங்கு கவனத்தில் கொள்ளப்படும். அதாவது செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது சுற்றுநிருபங்கள் மற்றும் நெறிப்படுத்தல் ஆலோசணைகள் தொடர்பில் வங்கி வெளிக்காட்டுகின்ற இணக்கப்பாடுகள் (Compliance) உட்பட வங்கியின் ஒட்டு மொத்த செயற்பாட்டு இடர்களையும் முகாமை செய்கின்ற விதம் இங்கு மதிப்பிடப்படவுள்ளது. இது கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

**5.3.1 வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் - 25புள்ளிகள்**
பின்வரும் விடயங்களின் பிரகாரம் வங்கியின் செயற்பாட்டு இடர்களை முகாமைசெய்கின்ற விதம் கவனத்தில் கொள்ளப்படும்.

- 2018.12.31ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற கணக்காய்வு அறிக்கைகளுக்கு 14நாட்களுக்குள் பதில் வழங்க நடவடிக்கை எடுத்தல் - **05புள்ளிகள்**
- வங்கியில் சகல கணக்குகளுக்குமான மாதாந்த பரீட்சைமீதிகள் சமப்பட்டிருத்தல். **05புள்ளிகள்** 50% அல்லது அதனைவிட கூடிய வீதத்தில் பரீட்சைமீதிகள் சமப்படவில்லை எனின் (-05 எதிர்க்கணியப்புள்ளி) வழங்கப்படும். அதனைவிட குறைந்த வீதம் எனின் 0 புள்ளிகள்
- பொதுப்பேரேடு உரிய முறையில் Update பண்ணியிருப்பின - **05 புள்ளிகள்** அவ்வாறு இல்லை எனின் (-01) (எதிர்க்கணியப்புள்ளி) மொத்தப்புள்ளியில் சேர்க்கப்படும்.
- வருடத்தினுள் வங்கியின் நன்மதிப்பை உயர்த்தும் வண்ணம் செயற்படுத்திய சமூகப்பணிகள் / ஆக்கத்தினுள்ள பணிகளுக்கு – **10புள்ளிகள்** (வங்கியின் அதிகாரப்பிரதேசத்தினுள் வாழும் அனைத்து மக்களையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட சமூகப்பணிகள்) இவ்வாறான 03 அல்லது அதற்கு கூடிய வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருப்பின் 10புள்ளிகள். ஒரு வேலைத்திட்டத்துக்கு 03புள்ளிகள் வீதம் (சுற்றுநிருபங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்திய வேலைத்திட்டங்கள் இதனுள் உள்ளடக்கப்படமாட்டாது. ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பிரதேச / மாவட்ட / தேசிய மட்டத்திற்கு தெரியப்படுத்தி இருத்தல் வேண்டும்.)
- தொங்கல் கணக்கு மீதிகள் செயற்படுத்திச் சென்றிருப்பின் **(- 05) புள்ளிகள்** அவ்வாறு இல்லை எனின் புள்ளிகள் இல்லை.

**5.3.2 கடிதங்களை கோவையிடல் (அலுவலக முகாமைத்துவம்) – 25புள்ளிகள்**

கீழ்வரும் விடயங்களை பூரணப்படுத்தி இருப்பின் முழுமையான புள்ளிகள் வழங்கப்படும்.

I. விடயங்களுக்கான மேம்படுத்தப்பட்ட (Update) கோவைகள், ஆவணங்களை நடாத்திச் செல்லல். (உள்வரும் / வெளிச் செல்லும் கடிதப்பதிவேடு, வரவுப் பதிவேடு, லீவுப் பதிவேடு, குறுகிய லீவுப் பதிவேடு, லொக் புத்தகம் உட்பட உள்ளக கட்டுப்பாட்டு பதிவேடுகளை மேம்படுத்திச் (Update) செயற்படுத்தல்).

II. கோவை மற்றும் ஆவணங்களின் அட்டையில் தெளிவான முறையில் பெயர் மற்றும் கோவை இலக்கம் குறிப்பிடப்பட்டிருத்தல்.

III.. கோவைகளின் கடிதங்களுக்கு இலக்கமிடுவதுடன் கோவைகளை உரிய முறைப்படி நடாத்திச் செல்லல்.

IV. மேற்பார்வை உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கபடும் கடிதங்களுக்கு உரிய முறையிலான கோவைக் குறிப்புகளை எழுதுதல்.
ஒவ்வொரு விடயத்துக்கும் 2.5 புள்ளிகள் வீதம் **கூடியது 10 புள்ளிகள்**

- சுற்றுநிருபங்கள், நெறிப்படுத்தல் ஆலோசனைகள், உள்ளக வழிகாட்டல்களுக்கான கோவைகளை உரிய முறையில் நடாத்திச் செல்லல்.- **05 புள்ளிகள்**
- கோவைகளை உரியமுறையில் அடுக்கிவைத்தல்
  பாவனையின் பின் வசதியாக கையாளக்கூடியதாக இருத்தல் - **05புள்ளிகள்**
- பணப்பெட்டியின் திறப்புக்களை சுற்றுநிருப ஆலோசனைகளுக்கமைய பயன்படுத்தல் - **05புள்ளிகள்**

**5.3.3 தகவல்களை முகாமை செய்தல் - 15 புள்ளிகள்**

**I.** 2017/13 ஆம் இலக்க இறுதிக்கணக்கு முடித்தல் மற்றும் நிதிக்கூற்று அறிக்கை தயாரித்தல் சுற்றுநிருபத்திற்கு அமைய 2018.12.31 ஆம் திகதியில் அனுப்பிவைக்கப்பட வேண்டிய வங்கியின் அனைத்து முன்னேற்ற அறிக்கையையும் உரிய திகதிக்கு முன்னர் சரியான முறையில் உரிய சமுதாய அடிப்படை வங்கிச்சங்கத்திற்கு அனுபுதல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை அதற்கான கோவைகளில் கோப்பிடல் - **05புள்ளிகள்**

II. 2018 ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டமிடல் தயாரிக்கப்பட்டிருத்தல். (செற்பாட்டுத்திட்டமிடலுடன் கூடிய கோவையினை நடாத்திச் செல்லல் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்) – **05புள்ளிகள்**

III. முறையான பின்னூட்டல் நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு முறைகளை செயற்படுத்திச் செல்லல். (கூட்டக்குறிப்புக்கள் மற்றும் பங்குபற்றியோரின் பட்டியல் என்பன கவனத்தில் கொள்ளப்படும்) – **05 புள்ளிகள்**

**06. இலாபத்தன்மை – மொத்தப்புள்ளிகள் 80**

ஒரு நிறுவனம் இலாபம் அடைய வேண்டுமாயின் செயற்பாட்டு வருமானம் செயற்பாட்டுச் செலவுகளை விட அதிகமாக இருத்தல் வேண்டும்.

**6.1 காலத்தினுள் உழைத்த இலாபம் ( 2018 ஆம் ஆண்டில்) – 35புள்ளிகள்**

வருடத்தினுள் உழைத்த இலாபம் ஒவ்வொரு 1மில்லியன் ரூபாவுக்கும் 03 புள்ளிகள் வீதம் **கூடியது – 35 புள்ளிகள்**

$$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{ஒரு மில்லியன் (ரூ)}}$$

இலாபத்தன்மை **13 -15** மில்லியன் ரூபாவுக்கு இடையில் இருப்பின் **01** வெகுமதிப் புள்ளியும் (Bonus) **15**மில்லியன் ரூபாவுக்கு கூடிய இலாபம் உழைத்திருப்பின் **02**வெகுமதிப்புள்ளிகள் (Bonus) உரித்தாகும்.

**6.2 வருமானத்தினுள் கடன்வட்டி வருமானம் - 20புள்ளிகள்**

கடன்வட்டி வருமானம் வீதத்தின் ஒவ்வொரு 10% க்கும் 04 புள்ளிகள் வீதம்

**கூடியது 20புள்ளிகள்**

$$\text{வருமானத்தினுள் கடன் வட்டி வருமானம்} = \frac{\text{கடன் வட்டி வருமானம்}}{\text{மொத்த வருமானம்}} \times 100$$

**6.3 சொத்துக்களுக்கான இலாப உழைப்பு வீதம் (AROA) – 10புள்ளிகள்**

$$\text{சொத்துக்களுக்கான இலாப உழைப்பு வீதம்} = \frac{\text{தேறிய இலாபம்}}{\text{சராசரி மொத்தச் சொத்து}} \times 100$$

சொத்துக்களுக்கான இலாப உழைப்பு வீதம் $\leq$ 1% எனின் 03 புள்ளிகளும் 1 விட அதிகரிக்கும் ஒவ்வொரு 0.5% அலகுக்கும் 2.5 புள்ளிகள் வீதம் **கூடியது 10 புள்ளிகள்.**

**6.4 பங்கொன்றின் உழைப்பு – 05 புள்ளிகள்**

$$\text{பங்கொன்றின் உழைப்பு} = \frac{\text{தேறிய இலாபம்}}{\text{மொத்த பங்குகளின் எண்ணிக்கை (பூர்த்தியான)}}$$

பங்கொன்றின் உழைப்பு $\leq$1000 எனின் 02 புள்ளிகளும் 1000/= விட அதிகரிக்கும் ஒவ்வொரு 200/= வுக்கும் 01புள்ளி வீதம் **கூடியது 05 புள்ளிகள்**

**6.5 வங்கியின் நிதிநிலைபேற்றுத் தன்மை – 05 புள்ளிகள்**

வங்கியின் நிதிநிலைபேற்றுத்தன்மை=

$$\frac{\text{தேறியநிதிச்சொத்துக்கள் (மொத்தசொத்து–வெளியார்பொறுப்புக்கள்)}}{\text{மொத்தவெளியார்பொறுப்புக்கள்(மொத்தவைப்புக்கள்+மீள்நிதியீட்டக்கடன்கள்+செலுத்தவேண்டியவை)}}$$

**(மு.கு – மொத்த வைப்புக்கள் கணிப்பிடும் போது பங்கு வைப்பினை தவிர்த்துக்கணிப்பிடல் வேண்டும்.)**

இவ் வீதாசாரம் 10% அல்லது அதனைவிட குறைவு எனின் 2.5 புள்ளிகளும் அதனைவிட அதிகரிக்கும் ஒவ்வொரு 10%க்கும் 2.5 புள்ளிகள் வீதம் **கூடியது 05 புள்ளிகள்.**

**6.6 மொத்த வருமானத்தில் பணிக்குழுச்செலவு வீதம் - 05 புள்ளிகள்**

இவ்வீதம் $\geq$ 30 எனின் - 02 புள்ளிகள்

30> வீதம் $\geq$ 25 எனின் -$\geq$ 03 புள்ளிகள்

25> வீதம் $\geq$ 20 எனின் - 04 புள்ளிகள்

இவ்வீதம் < 20 எனின் - 05 புள்ளிகள்

$$\text{மொத்த வருமானத்தில் பணிக்குழுச்செலவு வீதம்} = \frac{\text{பணிக்குழுச்செலவு}}{\text{வருடத்தினுள் மொத்த வருமானம்}} \times 100$$

பணிக்குழுச்செலவு = ( பொதுப்பேரேட்டின் குறியீட்டு இலக்கம் 2112, 2113, 2131 மற்றும் 2132 ஆகிய கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை )

**7. வங்கிச் சுற்றாடல் - மொத்தப்புள்ளிகள் - 35**

I. சுற்றுநிருப ஆலோசணைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகையினை காட்சிப்படுத்தல் மற்றும் சிறந்த முறையில் பராமரித்துச் செல்லல் **-05 புள்ளிகள்**

II. சுற்றுநிருப ஆலோசணைகளுக்கு அமைவாக வர்ணம் பூசுதல் **- 05புள்ளிகள்**

III. வங்கிக் கட்டிட பாதுகாப்பு விதிமுறைகள்
(மதில், வேலி, நிரந்தர பாதுகாப்பு கொண்ட கட்டிடமாக இருத்தல்) **- 05 புள்ளிகள்**

IV. தோட்டத்தினை சுத்தமாகவும் அழகாகவும் பேணல் **- 05 புள்ளிகள்**

V. வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை அன்புடன் வரவேற்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் (ஆசனவசதிகள் குடிநீர் மலசலகூட வசதிகள் பத்திரிகை தொலைக்காட்சி) ஒரு விடயத்துக்கு 2.5 புள்ளிகள் வீதம் கூடியது **-10 புள்ளிகள்**

VI. சுற்றுநிருபத்திற்கமைய தேவையற்றவற்றை அகற்றாது இருத்தல் - **(-1) புள்ளி** (எதிர்க்கணியப்புள்ளி) இல்லை எனின்

VII. அடிப்படைத் தகவல்களை காட்சிப்படுத்தல்
( வாடிக்கையாளர் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைத் தகவல்களை காட்சிப்படுத்தல் - வைப்புக்களின் வகைகள் , கடன்வகைகள் , வட்டி வீதங்கள், கடன் எல்லை , தலைமைக்காரியாலயத்தின் முக்கிய தொலைபேசி இலக்கங்கள்) ஒரு விடயத்திற்கு 1புள்ளிவீதம் கூடியது
**– 05புள்ளிகள்**

**8. விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல் :- (பிரதேசமட்டம் / வங்கிச்சங்க மட்டம்)**

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவத்தில் தகவல்களை உள்ளடக்க வேண்டியது உரிய வங்கி முகாமையாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இணைப்பு இலக்கம் 1இன் மூலம் உரிய படிவம் வெளியிடப்பட்டுள்ளது. உரிய வங்கியின் தகவல்களை உட்படுத்தும் போது அவ் வங்கிக்குரிய சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர் மூலம் அது கண்காணிக்கப்படல் வேண்டும்.

சரியான முறையில் தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது கீழ் வரும் படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

I. உரிய விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்துகொள்ளல் (Download)

II. வங்கிச் சங்கத்தின் கீழ் இயங்கும் வங்கிகளின் எண்ணிக்கைக்கு அமைய ஒரு வங்கிக்கு ஒரு வினாக்கொத்து என்ற வகையில் தேவையான அளவு வினாக்கொத்து படிவங்களை சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் தயார் செய்தல்.

III. தீர்மானிக்கின்ற தினத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளரின் கண்காணிப்பின் கீழ் உரிய வங்கி முகாமையாளர் மூலம் தமது வங்கிக்குரிய படிவத்தினை பூரணப்படுத்தி பெற்றுக் கொள்ளல் வேண்டும். (தொடரிலக்கம் 3,4,5.1,5.2,6ஆகியவற்றின் உபபிரிவுக்குட்பட்ட நியதிகளுக்கு புள்ளியிடல்.)

IV. நியதி இலக்கம் 5.3 மற்றும் 7 ஆகியவற்றின் உபபிரிவுகட்குட்பட்ட நியதிகளுக்கு குழுவினால் புள்ளிகள் வழங்கப்படும்.

V. சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் தமது வங்கிச் சங்கத்தின் கீழ் இயங்கும் அனைத்து வங்கிகளினதும் தகவல் படிவங்களை பூர்த்தி செய்த பின்னர் அப்படிவங்களை உரிய முறைப்படி பிரதேச செயலாளர் ஊடாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்

**8.1 வெளி அவதானிப்புகளுக்கு அமைய புள்ளி வழங்கல்**

உரிய படிவத்தில் தகவல்களை உட்படுத்தும் போது தொடர் இலக்கம் 5 .3 மற்றும் 07 என்பவற்றின் உபபிரிவுகளை உள்ளடக்கிய விதத்தில் புள்ளிகளை வழங்கும் போது ஏற்கனவே பட்டியல்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக வெளி அவதானிப்புகளுக்கமைய அவற்றிற்கான புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. தெரிவு செய்யப்படும் சுயாதீனமான குழுவின் மூலம் அதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். வெளியார் அவதானிப்புகளுடன் புள்ளியிடும் நடவடிக்கைகள் உரிய பிரதேச செயலாளரின் கண்காணிப்பின் கீழ் நியமிக்கப்படும் குழுவினால் மேற்கொள்ளப்படும

மாவட்டத்தின் பிரதிநிதி உட்பட 05 பேர் கொண்ட குழுவினை பிரதேச செயலாளரின் கீழ் அமைத்துக்கொள்ளல் வேண்டும். (தலைமைக்காரியாலய உத்தியோகத்தர் தவிர) இக்குழுவின் ஒழுங்கமைப்பு பின்வருமாறு அமையும்.

1. **பிரதேச செயலகப்பிரிவின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் - தலைவர்**
2. **சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர் - செயலாளர்**
3. **மாவட்ட சமுர்த்திக்காரியாலய முகாமையாளர் ஒருவர்**
4. **தலைமையக முகாமையாளர்**
5. **கருத்திட்ட முகாமையாளர்**
6. **பிரதான காரியாலயத்தின் உத்தியோகத்தர் ஒருவர்**

மாவட்டத்திற்குரிய உத்தியோகத்தரின் பெயர் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரினாலும் பிரதேச மட்டத்திலான உரிய உத்தியோகத்தர் தெரிவு பிரதேச செயலாளராலும் மேற்கொள்ளப்பட வேண்டும். நியமிக்கப்படவுள்ளவர்களின் பெயர்ப்பட்டியலை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு முன்வைத்து அதற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும். பிரதான காரியாலயத்துடன் தொடர்புபட்ட உத்தியோகத்தரின் தெரிவு குறுநிதிப்பிரிவின் பணிப்பாளரின்னால் பெயர்குறிப்பிடப்பட்டு பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்படும். (இணைப்பு – 02) அதற்கமைய அவர்களது கடமைக்கூறுகள் பொறுப்பாக்கப்படும்.

**8.2 தகவல்கள் உண்மையென உறுதிப்படுத்தல் மற்றும் பெறுபேற்று அறிக்கையினை ஒப்படைத்தலும்:**

வங்கியின் முகாமையாளரினால் தமது வங்கிக்குரிய தகவல்கள் உரியபடிவத்தில் உள்வாங்கப்பட்டதன் பின்னர் உரிய சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளரினால் அத்தகவல்களின் உண்மைத்தன்மை பரிசீலிக்கப்பட்டு தகவல்கள் உண்மையானது என உறுதிப்படுத்தி ஒப்பமிடல் வேண்டும். அத்துடன் வெளி அவதானிப்புகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளுக்கான படிவங்களையும் சேர்த்து அனைத்து புள்ளியிடப்பட்ட படிவங்களையும் பிரதேசசெயலாளரின் சிபாரிசுடன் ஒரு கடிதஉறையில் இட்டு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**8.3 மாவட்ட மட்டம்**

மாவட்ட மட்டத்தில் புள்ளிகளை உள்வாங்குதவதற்கான மாவட்ட மதிப்பீட்டுப்படிவத்தினை குறுநிதிப்பிரிவின் samubankgrading@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் samubg2019 எனும் இரகசிய குறியீட்டினை பாவித்து தரவிறக்கம் (Download) செய்து கொள்ளமுடியும் ஒவ்வொரு வங்கியினதும் தகவல்களை உட்படுத்தும் போது மாவட்டத்தின் மாதாந்த வங்கி முன்னேற்ற அறிக்கையினை அனுப்பும் வங்கி ஒழுங்கின் பிரகாரம் வங்கிகளின் பெயர்களை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். (தகவல் பகுப்பாய்வு நடவடிக்கையினை இலகுபடுத்தும் பொருட்டு) சரியான முறையில் தகவல்களை வழங்காத, முழுமையாக பூரணப்படுத்தாத, உரிய மதிப்பீட்டு படிவத்தினை பயன்படுத்தாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படல் வேண்டும்.

மாவட்ட மட்ட மதிப்பீட்டுப்படிவத்தில் தகவல்களை உட்படுத்திய பின்னர் மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் / மாவட்ட செயலாளரின் ஆலோசனைக்கமைய மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் மூன்று பேர் அடங்கிய குழுவின் மூலம் பிரதேச மட்ட மற்றும் மாவட்ட மட்ட பெறுபேற்று அறிக்கைகள் தனித்தனியாக தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் மாவட்ட மட்டத்தின் வங்கி மதிப்பீட்டு மற்றும் தரப்படுத்தல் பெறுபேற்று அறிக்கையினை தயாரித்து தேசிய மட்ட மதிப்பீட்டின் பொருட்டு மாவட்ட பெறுபேற்று அட்டவணையினையுடன் சகல மதிப்பீட்டு படிவங்களையும் மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அனுமதியுடன் பிரதான காரியாலயத்தின் குறுநிதிப் பிரிவுக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். (இவ்விபரங்கள் Pen-Drive) மூலம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்) மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கும் சந்தர்ப்பங்களில் கீழ்வரும் முகவரிக்கு மாத்திரம் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவும். முன்னர் மதிப்பீட்டுப்படிவத்தினை தரவிறக்கம் செய்த மின்னஞ்சல் முகவரிக்கு பெறுபேற்று அட்டவணைனிளை அல்லது பூரணப்படுத்தப்பட்ட படிவத்தை அனுப்பி வைப்பதை முழுமையாக தவிர்க்கவும்.

**மின்னஞ்சல் முகவரி mfdevelopment2018@gmail.com**

ஒவ்வொரு மாவட்டத்தினதும் சமுர்த்திப் பணிப்பாளரினால் மாவட்டத்தின் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் 10 வங்கிகள் கண்காணிக்கப்படல் வேண்டும். இப் 10 வங்கிகளும் A தரம் பெறக்கூடிய வங்கிகளாயின் அதற்கு அடுத்தபடியாக மாவட்டத்தில் A தரம் பெறும் நிலையில் உள்ள அனைத்து வங்கிகளும் மாவட்ட பணிப்பாளரினால் கண்காணிக்கப்பட்டு பெற்றுள்ள புள்ளிகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். இருப்பினும் தங்களுக்கு அவசியம் எனின் எந்தவொரு வங்கியினதும் புள்ளியிடல் முறையினை கண்காணித்து பரீட்சிக்க முடியும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

### 8.4 வங்கிகளை D தரத்திற்கு உள்வாங்குதல்

இச்சுற்று நிருபத்தின் 1.1 (III) விடயத்திற்கான வங்கிகள் மாவட்டத்தின் D தர வங்கியின் கீழ் உள்வாங்கப்படுதல் வேண்டும். மாவட்டத்தின் பெறுபேற்று அறிக்கைகள் உரிய அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டு (பதவி முத்திரைகளுடன்) உரிய திகதிக்கு முன்னர் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகும் பெறுபேற்றுப்பட்டியல் தேசியமட்ட மதிப்பீடுகளில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

## 9. புள்ளிகளின் அடிப்படையில் வங்கிகளை தரப்படுத்தல்

வங்கிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் 04 பிரிவுகளாக வங்கிகள் தரப்படுத்தப்படவுள்ளதுடன் அவை கீழ்வருமாறு அமையும்.

### 9.1 புள்ளி வழங்கல் திட்டத்திற்கமைய வங்கிகளைத் தரப்படுத்தல்

| | |
|---|---|
| மொத்தபுள்ளிகள் **375** அல்லது அதனைவிட அதிகம் - விசேட தரம் | - **A** தரம் |
| **325 - 375** வரை புள்ளிகள் - திருப்திகரமானது | - **B** தரம் |
| **250 - 325** வரை புள்ளிகள் - சாதாரணமானது | - **C** தரம் |
| **250** புள்ளிகளுக்கு கீழ் புள்ளிகள் - விசேட கவனம் செலுத்த வேண்டியவை | - **D** தரம் |

ஒட்டுமொத்த வங்கி வலையமைப்பும் மேற்குறிப்பிட்ட விதத்தில் புள்ளிகளை பெறும் போது அதற்கான தரத்தில் உள்வாங்கப்படும் எதிர்காலத்தில் ஒவ்வொரு வருடமும் அறிமுகப்படுத்தப்படும் நியதிகளுக்கமைய வங்கி தரப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். ( காலத்திற்கு ஏற்ற விதத்தில் இன் நியதிகள் மாற்றம் செய்யப்படலாம்) இங்கு கருத்தில் கொள்ளப்படும் காலத்தில் நியதிகளுக்கமைய பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் சில வங்கிகள் முன்னரை விட குறைவான தரத்திற்கு செல்லவும் முடியும். எனவே தொடர்ச்சியாக உயர்வான தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கியின் முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## 10 மதிப்பீட்டு முறைகள் - பாராட்டுதல்

மதிப்பீட்டுச் செயற்பாடுகள் 02 கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது

- வங்கிகளை மதிப்பீடு செய்தல் (வங்கி மட்டத்தில்)
- பணிக்குழுவினை மதிப்பீடு செய்தல் - ( வங்கிச் செயற்பாடுகளுக்கு வழங்கிய பங்களிப்புகளுக்கு அமைய)

### 10.1 வங்கிகளை மதிப்பீடு செய்தல் (பாராட்டுதல்)

வங்கி தரப்படுத்தலுடன் இணைந்த விதத்தில் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான மதிப்பீட்டு (பாராட்டுச்) செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

**10.1.1 பிரதேச மட்டம்.**

மேற்படி நியதிகளுக்கு அமைய பிரதேச செயலக மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற 03 வங்கிகள் வரிசைப்படி தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்படவுள்ளது. இதற்கு குறைந்த மட்டப் புள்ளியாக **250** அல்லது அதனைவிட கூடுதலான புள்ளிகள் பெறல் வேண்டும்.

**10.1.2 மாவட்ட மட்டம்**

மேற்படி நியதிகளுக்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற 03 வங்கிகளை வரிசைப்படி தெரிவு செய்து அவை பாராட்டப்படவுள்ளன. ஒப்பீட்டுரீதியாக வங்கிகளின் எண்ணிக்கை அதிகமாவுள்ள மாவட்டங்களில் இருந்து பாராட்டுதலுக்கு உட்படுத்தப்படும் வங்கிகளை தெரிவு செய்யும் போது அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். எனவே அவ்வாறான மாவட்டங்களில் சற்று கூடதலான வங்கிகள் (கீழ் குறிப்பிட்டுள்ளவாறு) பாராட்டுதலுக்கு தெரிவு செய்யப்படல் வேண்டும். இங்கு குறைந்தது **325** புள்ளிகளை அல்ல அதற்கு அதிகமான புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

மாவட்ட மேலதிக சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் / அரசாங்க அதிபரின் பூரண கண்காணிப்பின் கீழ் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரின் தலைமையில் மாவட்ட மட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| வங்கிகளின் எண்ணிக்கை – 60தை விட குறைவாகவுள்ள மாவட்டங்கள் | -3 இடங்கள் (1,2,3) |
| வங்கிகள் 61 > 90 வரையுள்ள மாவட்டங்கள் | - 5 இடங்கள் (1,2,3.4,5,) |
| வங்கிகள் 91 > 120 வரையுள்ள் மாவட்டங்கள் | - 6இடங்கள் (1,2.,3,4,5,6) |

**10.1.3 மாவட்ட மட்டத்தில் அதிகூடிய A தர வங்கிகளை பெற்றுக்கொண்ட சமுர்த்தி வங்கிச் சங்கத்தினை தெரிவு செய்து அதனை பாராட்டுதல் வேண்டும். (வீதாசார அடிப்படையில்)**

**10.1.4 தேசிய மட்டம்**

பணிப்பாளர் நாயகத்தின் முழுமையான கண்காணிப்பின் கீழ் நியமிக்கப்படுகின்ற தேசிய மதிப்பீட்டுக் குழுவின் தலைமையில் இம் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்வதுடன், தேசிய மட்டத்திற்கு உள்வாங்கப்படும் வங்கிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்ற 10 வங்கிகள் தரப்படுத்தலின் போது தேசிய மட்டத்தில் 01 இல் இருந்து 10 வரையான இடங்களுக்கு தெரிவு செய்யப்படவுள்ளன. இம்மதிப்பீட்டுக்கு தேசிய மட்டத்தில் கள ஆய்வுகளுக்கும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படவுள்ளன இதற்கு மேலதிகமாக 375 புள்ளிகளுக்கு கூடிய புள்ளிகளைப் பெறும் சகல வங்கிகளும் நினைவுப்பரிசு பெற தெரிவு செய்யப்படும்.

**10.1.5 அதிவிசேடதர வங்கிகளை பாராட்டுதல்**

வங்கி தரப்படுத்தல் நியதிகளுக்கமைய ஏதாவது ஒரு சமுர்த்தி வங்கி பெற்றுக்கொண்ட புள்ளிகளின் எண்ணிக்கை **425** தை விட அதிகம் எனின் அவ்வங்கி அதிவிசேட தரவங்கியாக விசேட பாராட்டுதலுக்கு உட்படுத்தப்படும்.

**10.1.6 அதிகூடிய இலாபத்தினை உழைத்த வங்கியினை மதிப்பீடு செய்தல்**

தேசிய மட்டத்தின் இலாப உழைப்பிற்கு கூடிய பங்களிப்பினை வழங்கிய வங்கி தெரிவுசெய்யப்பட்டு தேசியமட்டத்தில் பாராட்டப்படவுள்ளது. இங்கு மொத்த வருமானத்தினுள் கடன் வட்டி வருமானம் 50% அல்லது அதனைவிட கூடியதாக இருத்தல் வேண்டும்.

**10.1.7 கூடுதலான அளவு "A" தரவங்கிகளை பெறுகின்ற மாவட்டமும் பாராட்டப்பட்டுள்ளது.**

**10.1.8 கூடுதலான அளவு "A" தரவங்கிகளை பெறுகின்ற சமுர்த்தி சமுதாய அடிப்படைவங்கிச்சங்கமும் பாராட்டப்பட்டுள்ளது (விகிதாசாரத்துக்கமைய)**

### 10.2 பணிக்குழுவினரைப் பாராட்டுதல்

வங்கித் தரப்படுத்தல் செய்முறையில் "A" தரத்திற்கு தெரிவுசெய்யப்படும் வங்கிகள் மற்றும் விசேட தரத்தினை பெறும் வங்கிகளினதும் சகல உத்தியோகத்தர்களும் பாராட்டப்படுவதுடன்அவ் உத்தியோகத்தர்களுக்கு நினைவுப்பரிசு அல்லது சான்றிதழ் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

#### 10.2.1 ஒன்றிணைந்த பாராட்டுதல்கள் ( பிரதேச மட்டம்)

பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வங்கிகளின் முகாமையாளர், வங்கிப் பணிக்குழுவினர், கள உத்தியோகத்தர்கள், மற்றும் கட்டுப்பாட்டுச் சபை என்பன பாராட்டுதலுக்கு உட்படுத்தப்படும்.

#### 10.2.2 ஒன்றிணைந்த பாராட்டுதல்கள் ( மாவட்ட மட்டம்)

மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் வங்கியின் முகாமையாளர்கள், வங்கிப் பணிக்குழுவினர், கள உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டுச் சபை, வங்கிச்சங்க முகாமையாளர்கள் , நிறைவேற்றுச்சபை மற்றும் பிரதேச செயலாளர் போன்றோர் பாராட்டுதலுக்கு உட்படுத்தப்படுவர்.

#### 10.2.3 தேசிய மட்டத்திலான பாராட்டுதலும் நினைவுப் பரிசில் வழங்குதலும்

பணிப்பாளர் நாயகத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் குறுநிதிப் பணிப்பாளரின் தலைமையில் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் வங்கிகளுக்குரிய முகாமையாளர்கள், வங்கிப் பணிக்குழுவினர், களத்துறை உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டுச்சபை, வங்கிச்சங்க முகாமையாளர், நிறைவேற்று சபை மற்றும் பிரதேச செயலாளர், வங்கிக்குரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், மற்றும் வங்கி விடய பொறுப்பு முகாமையாளர் ஆகியோர் பாராட்டப்படவுள்ளனர்.

## 11. விசேட வேலைத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பங்களிப்புக்கள்

### 11.1 கூடுதலான களப் பெறுவனவு / சங்கப் பெறுவனவு

கணிப்பீட்டுக் காலத்தினுள் அனைத்து வைப்புக்கணக்குகளுக்கும் கூடிய களப் பெறுவனவினை சேகரித்த **சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும்** பாராட்டுக்கு உட்படுத்தப்படவுள்ளார். மாவட்ட மட்டத்தில் கூடிய களப் பெறுவனவினை சேகரித்த உத்தியோகத்தரை தெரிவு செய்து அதன் பெறுபேறுகளை தேசிய மட்டத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மாவட்டப் பணிப்பாளரால் இது மேற்கொள்ளப்பட வேண்டும். (தகவல்களை முன்வைக்கும் போது மேற்படி 8.2பந்தி பின்பற்றப்படல் வேண்டும்). மேலும் மோசடிகள் , தவறுகளில் ஈடுபடாத உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

### 11.2 கூடுதலான கடன் வழங்கல்

கடந்த ஆண்டினுள் தேசிய மட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் கூடுதலான கடன்களை வழங்கியுள்ள **சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும்** பாராட்டப்பட உள்ளார். இங்கு உரிய கிராமசேவகர் பிரிவில் அறவிட முடியாக்கடன் 3% இற்கு குறைவாகவும், காலம் கடந்த கடன் 5% விட குறைவாகவும் காணப்படுவதுடன், கடனாளிகளின் வீதம் 50% தை அதிகமாகவும் இருத்தல் வேண்டும். மாவட்ட மட்டத்தில் கூடுதலான கடன்களை வழங்கியுள்ள உத்தியோகத்தரை தெரிவு செய்து அதன் பெறுபேற்றினை தேசிய மட்டத்திற்கு முன்வைக்கப்படல் வேண்டும். இவ் விடயம் தொடர்பாக மாவட்டத்திற்கு பிரதான பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளது. கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் பரிசீலனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ( தகவல்களை முன்வைக்கும் போது மேற்படி 8.2பந்தி பின்பற்றப்படல் வேண்டும்).

**11.3 சுற்று நிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தும் விசேட வேலைத்திட்டங்கள்**

2018ம் ஆண்டினுள் சுற்றுநிருபங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் சேமிப்பு வேலைத்திட்டத்தில் கூடிய பங்களிப்பினை செய்த **சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை** தேசிய மட்டத்தில் பாராட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் எமக்கு கிடைக்கவுள்ள தகவல்களின் பிரகாரம் பாராட்டுதல்கள் மேற்கொள்ளப்படும். (தகவல்களை முன்வைக்கும் போது மேற்படி 8.2 பந்தி கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்).

மேற்படி 11.1 , 11.2 , 11.3 ஆகியவற்றின் பிரகாரம் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் திறமையினை வெளிக்காட்டிய உத்தியோகத்தர்கள் பிரதேச மற்றும் மாவட்ட மட்ட பாராட்டு நிகழ்வுகளில் பாராட்டப்பட்டுள்ளனர்

**இவ் விடயங்களிற்கு மேலதிகமாக விசேட திறமைகளை வெளிக்காட்டிய உத்தியோகத்தர்கள் இருப்பின் அதற்கான தகவல்களுடன் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கநடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகின்றேன்.** (உ-ம் மதிப்பீட்டு காலத்திற்குள் பெருந்தொகையான அறவிடமுடியாக் கடன்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தமை போன்றன)

13. **இம் மதிப்பீட்டு ச் செயற்பாடுகளின்போது சமுர்த்தி வங்கிகள் மற்றும் அதனோடு சம்மந்தப்பட்ட துறைகளில் விசேட பணிகளை ஆற்றிய உத்தியோகத்தர்களுக்கான விசேட ஊக்குவிப்புக்கள் மற்றும் பாராட்டுச் செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கும் முன்மொழியப்படவுள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றேன்.**

## 14. மதிப்பீட்டு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ள கால எல்லை

**2019.04.01 - 2019.05.31** வரையான காலம். அட்டவணை முன்வைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல 03 இன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது)

## 15. ஒருங்கிணைப்பு மற்றும் பின்னூட்டல்கள் மேற்கொள்ளல்

பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் குறு நிதிப் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் நியமிக்கப்படும் குழு.

## 16. பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்

பாராட்டுக்கு உட்படுத்தப்படுகின்ற வங்கிகள் வங்கிச் சங்கங்கள் மற்றும் அவற்றின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ள பரிசில்கள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும். மேலும் அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய குறுநிதிப் பணிப்பாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டு விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரால் தீர்மானிக்கப்படும் தினத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் மற்றும் கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சர், அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் தலைமையில் நடைபெறும் தேசிய விழாவில் பாராட்டுதல்கள் வழங்கப்படும்.

## 17. பொதுவான விடயங்கள்

**17.1** இவ் ஊக்கப்படுத்தல் செயற்பாடானது பொதுவாக சுயாதினமானதாக அமைய வேண்டியதுடன் இதற்கான கடமைகளுக்கு பொறுப்பாக்கப்படவுள்ள உத்தியோகதர்கள் அதனை உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

**17.2**உரிய இணைப்புக்களின் மூலம் சகல வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை தெளிவாக விளங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**17.3** நியமிக்கப்படுகின்ற மதிப்பீட்டு குழுவின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடமைக்கூறுகளை அவர்கள் சரியான முறையில் நிறைவேற்றுதல் வேண்டும்.

இம் மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தங்களுக்கு மேலதிகமான செலவுகள் ஏதும் ஏற்படுமாயின் அது தொடர்பாக அண்ணளவான செலவு மதிப்பீட்டு அறிக்கையினை முன்வைத்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (உரிய செலவு மதிப்பீடுகள் சுற்று நிருபங்களுக்கு அமைவாக சாதாரணமாக அமைதல் வேண்டும.)

இவ் ஊக்குவிப்பு செயற்பாட்டினைப் படிப்படியாக முன்னேற்றிக் கொண்டு செல்ல எதிர்பார்ப்பதுடன் ஒவ்வொரு ஆண்டும் இம் மதிப்பீட்டு செயற்பாட்டினை தொடர்ச்சியாக செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம். மேலும் இதற்கு மேலதிகமாக

ஒட்டுமொத்த சமுர்த்தி வங்கி வலையமைப்பின் அனைத்து பணிக்குழுவினருக்குமான செயற்திறன் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தினையும் இவ் ஆண்டிலிருந்து செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதும் பிரச்சனைகள் இருப்பின் அல்லது விளக்கங்கள் தேவையாயின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றீர்.

குறுநிதிப்பிரிவின் தொலைபேசி இலக்கம்
**011-2872227 – விடயப்பொறுப்பு முகாமையாளர் எச்.றுக்மா மாணல்**

**S.E.R.D.M.S.P.பண்டார,**
பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்** :-

01. செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு – தகவலுக்காக
02. சகல மாவட்ட செயலாளர்களுக்கும். - தகவலுக்காகவும்
03. பிரதான கணக்காளர் , சமு.அபி.திணைக்களம் - - தகவலுக்காக
04. பிரதம உள்ளக கணக்காய்வாளர் , சமு.அபி.திணைக்களம் - தகவலுக்காக
05. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - உ.ந.பொருட்டு.
06. சகல பிரதேச செயலாளர்களுக்கும். - தகவலுக்காகவும்
07. சகல நிறைவேற்று சபை தலைவர்களுக்கும், வங்கிச்சங்கம் - தகவலுக்காக
08. சகல கட்டுப்பாட்டுசபை தலைவர்களுக்கும் - சமுர்த்தி வங்கி - தகவலுக்காக

TRANSLATED BY - I ALIYAR